ISSN : 2455-0531

இனம்

இனம் இனத்தைச் சேரும்!

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!

மலர் : 1 இதழ் : 1, மே 2015 Vol. I Issue 1, May 2015



க. ப. அறவாணன் இரா. குணசீலன்

ந. இராஜேந்திரன் ச. முத்துச்செல்வம்

மு. முனீஸ்மூர்த்தி த. சத்தியராஜ் மதிப்புரை

inam:International Research E Journal Tamil Studies

Inam ISSN : 2455 - 0531

இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

An Internationally Refereed e_ Journal of Tamil Studies

பதிப்பாசிரியர்

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி.
முனைவர் தசத்தியராஜ்.

ஆசிரியர்குழு

முனைவர் சிலம்பு நா. செல்வராசு (புதுச்சேரி)
முனைவர் ஆ. மணி (புதுச்சேரி)
முனைவர் க. பாலாஜி (கோவை)
முனைவர் ந. இராஜேந்திரன் (பெருந்துறை)
முனைவர் சி. இரவிசங்கர் (மதுரை)
முனைவர் ப. சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச. முத்துச்செல்வம் (கோவை)

வெளியிடுபவர்

முனைவர் தசத்தியராஜ்.
கோவை
9600370671
inameditor@gmail.com
www.inamtamil.com

மே 2015 மலர் : 1 இதழ் : 1

May 2015 Volume I Issue 1

உள்ளே ...

பரிதாபப் பிஎச்.டி.யும் பாவ யு.ஜி.சி.யும்
முனைவர் க.ப.அறவாணன் 3

இணையத்தில் கலித்தொகை
முனைவர் இரா. குணசீலன் 8

அறநூல்களின் தோற்றத்திற்கான தேவைகளும் காரணமும்
முனைவர் ந. இராஜேந்திரன் 18

மீடியம் சிறுகதையில் வறுமைப் புனைவு
ச. முத்துச்செல்வம் 24

மலைபடுகடாம் நவிலும் மானுட விழுமியங்கள்
முனைவர் மு. முனீஸ்மூர்த்தி (அமுதன்) 29

புதுயுக நூல் வெளியீடு : கலித்தொகைப்பதிப்பும் உரைச்சிறப்பும்
முனைவர் த. சத்தியராஜ் (நேயக்கோ) 35

பீச்சி : நூல்மதிப்புரை
முனைவர் அருவி.தேன்மொழி 47

inam:International Research E_Journal Tamil Studies ISSN : 2455-0531
May 2015, Issue : 1 www.inamtamil.com

புதுயுக நூல் வெளியீடு : கலித்தொகைப்பதிப்பும் உரைச்சிறப்பும்

முனைவர் த.சத்தியராஜ் (நேயக்கோ)
தமிழ் - உதவிப் பேராசிரியர்
இந்துஸ்தான் கலை & அறிவியல் கல்லூரி
கோவை, தமிழ்நாடு, இந்தியா
9600370671

கலித்தொகை, சங்க மக்களின் பண்பாட்டுக் களஞ்சியம். இது இருவர் பேசுமாறு அமையும் போக்குடையது. இத்தகு நூலினை முதலில் வெளிக்கொணர்ந்த பெருமை சி.வை.தாமோதரம்பிள்ளையையே (1887) சாறும். அதன் பின்பு பல பதிப்புகள் வெளிவந்துள்ளன. அப்பதிப்புகளுள் புதுயுக நூல் வெளியீட்டாரின் பதிப்பும் குறிப்பிடத்தக்கது. அவர்தம் பதிப்புக் குறித்தும், அ.விசுவநாதன் என்பாரின் உரைச்சிறப்புக் குறித்தும் ஈண்டு நோக்கப்படுகின்றது.

கலித்தொகைப் பதிப்புகள்: வரலாறு

கலித்தொகையின் பதிப்பு முயற்சி 1887 இல் தொடங்கி இன்று வரை பல பதிப்புகள் பல பதிப்பகங்களின் வழி வெளிவந்த வண்ணம் உள்ளது. அஃதாவது இருபத்தியெட்டுப் பதிப்புகளுக்குமேல் இந்நூல் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அப்பதிப்பாண்டுகள் வருமாறு: 1887 (சி.வை.தாமோதரம்பிள்ளை), 1925, 1930, 1931 (இ.வை.அனந்தராமையர்), 1933 (தை.ஆ.கனகசபாபதி முதலியார்), 1938 (மு.காசிவிசுவநாதன் செட்டியார்), 1941 (ந.சி.கந்தையா), 1949 (நா.இராமய்யாபிள்ளை), 1951 (எஸ்.ஆர்.மார்க்கபந்து சர்மா), 1957 (மர்ரே எஸ்.இராஜம்), 1958 (புலியூர்கேசிகன்), 1958 (மா.இராசமாணிக்கனார்), 1958 (சக்திதாசன் சுப்ரமணியன்), 1968, 1969, 1966 (பொ.வே.சோமசுந்தரனார்), 1987 (லேனா தமிழ்வாணன்), 1999 (அ.மாணிக்கம்), 2003 (சு.ப.அண்ணாமலை), 2004 (அ.விசுவநாதன்), 2007 (இரா.மணியன், குழ.கதிரேசன்), 2008 (இரா.சரவணமுத்து), 2009 (ச.வே.சுப்பிரமணியன்) என்பன (மு.முனீஸ்மூர்த்தி, 2010:5-6). இவற்றுள் சில பதிப்புகள் வணிக நோக்குடனும், சில வணிக நோக்குமின்மையும் ஆகச் செயல்பட்டுள்ளன.

புதுயுக நூல் வெளியீட்டகமும் கலித்தொகைப் பதிப்பும்

புதுயுக நூல் வெளியீட்டகம் (NCBH) எனும் பதிப்பகம் முகிழ்த்தது 1951ஆம் ஆண்டாகும். இப்பதிப்பகம் 1947இல் விவசாய மேம்பாடு, தொழில் வளர்ச்சி, விமர்சனங்கள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகள் பற்றிய செய்திகளை நவயுகப் பதிப்பகம் சார்பில் வெளியிட்டன. அதன்பின்பு உலகத் தொடர்புக்காக ஆங்கில மொழியில் எழுதும் கட்டுப்பாடு இருந்தமையான் பி.பி.எச்., என்பதாகத் தோன்றியது. இது, தத்துவப் பிரச்சனை, உலகாயுதம், மதங்களின் வரலாறு பற்றிய கருத்துகளை வெளியிட்டு வந்தது. இவ்வாறாகவே புதுயுக நூல் வெளியீடாக வளர்ந்தது. இப்பதிப்பகம் உருவாவதற்கு ஆணிவேராக இருந்தர் கள் பி.எஸ்.ராவ்., மோகன், குமார மங்கலம், கல்யாணசுந்தரம், வ.சுப்பையா ஆகியோரார் (2015:2).

இப்பதிப்பகத்தின் நோக்கமாக நல்ல கருத்துகளைப் படைப்பாளிகளைப் படைக்கச் செய்ய வேண்டும், மக்களை வாசிக்க வைக்க வேண்டும் என்பதேயாம் (2015:3). இது மார் க்கசியப் பின்னணியில் உருவான பதிப்பகமாகும். இதன் தலைவர் ஆர்.நல்லக்கண்ணு என்பவராவர். இர் எளிமைக்கு உதாரணமாக வாழ்ந்து காட்டுபவர். இப்பின்னணியின் அடிப்படையில் அனைத்துப் படைப்புகளையும் அனைத்து வாசகரும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆயின், இப்பதிப்பகம் சங்க இலக்கியத்தையும் அனைத்து வாசகரும் புரிந்து கொள்ளும் வகையில் சமகால இலக்கிய அறிஞர்களைக் கொண்டு உரை எழுதச்சொல்லி வெளியிட்டுள்ளது. சங்க இலக்கியம் பின்வரும் உரையர்களைக் கொண்டு ஒவ்வொரு இலக்கியத்துக்கும் உரையாத்து வெளியிடப் பெற்றுள்ளது.

நூல்கள்	***உரையர்கள்***
நற்றிணை	*கு.வெ.பாலசுப்பிரமணியன்*
குறுந்தொகை	*வி.நாகராசன்*
ஐங்குறுநூறு	*அ.தட்சிணாமூர்த்தி*
பதிற்றுப்பத்து	*அ.ஆலிஸ்*
பரிபாடல்	*பெ.சுப்பிரமணியன்*
கலித்தொகை	***அ.விசுவநாதன்***
அகநானூறு	*இரா.செயபால்*
புறநானூறு	*கு.வெ.பாலசுப்பிரமணியன், **அ.விசுவநாதன்**, வி.நாகராசன், இரா.ஆரோக்கியசாமி, அ.திலகவதி, வெ.சத்திய நாரயாணன்*
பத்துப்பாட்டு	*இரா.மோகன் (தொகுதி1), வி.நாகராசன் (தொகுதி 2)*

இவ்வுரையுர்கள் அனைவரும் பேராசிரியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பேராசிரியர்களைக் கொண்டு உரையாக்கியமைக்குக் காரணம்: கடினமாக அமைந்த பழைய உரைகளை எளிமைப்படுத்தி வாசகர்களைப் பெருக்குவதே ஆகும்.

பழைய உரைகள் கற்பதற்குக் கடினமாக அமைந்துவிட்ட காரணத்தினால், பழைய உரை ஆகியவற்றின் சிறப்பு, சிறிதளவும் சிதையாமல் அறிஞர் பெருமக்கள் உரை வரைந்துள்ளனர். உரைகள் புத்துரைகளாகவே அமைகின்றன. மூலத்தின் சிறப்பு உரையில் மிளிர்கின்றது. பலபுதிய நுண்ணிய கருத்துகளையும் உரையாசிரியர்கள் தத்தம் உரைகளில் ஆங்காங்கே எடுத்துச் சொல்லுகின்றனர். பழைய உரையாசிரியர்கள் இலக்கணக் குறிப்புகள் மிகுதியும் தருவர். இவ்வுரைகளில் உரையாசிரியர்கள் அருஞ்சொற்களுக்கும் சிறப்பிடம் தந்துள்ளனர் (2011: XV - XVI).

சங்க இலக்கியங்களை பதிப்பிக்க முன்வந்தமைக்குக் காரணம் தமிழ் மக்களுக்கு அறிமுகம் செய்ய வேண்டும் என்ற நோக்கமேயாம். அவ்வறிமுகம் எளிமையை நோக்கி அமைந்திருத்தல் வேண்டும் என்பது அப்பதிகத்தின் முதன்மை நோக்கமாகவும் விளங்கியது. இதனைப் பின்வரும் கருத்துத் துலக்கி நிற்கும்.

முதன் முதலாகக் கன்னி முயற்சியாகச் சங்க இலக்கியத்தை நேரிய முறையில் தமிழ் மக்களுக்கு அறிமுகம் செய்யவேண்டும். அவர் கள் பயனுறவேண்டும் என்னும் நன் நோக்கத்தோடு பதிப்புப் பணியை, பொறுப்பை எமது நிறுவனம் ஏற்றுக் கொண்டது. சங்க இலக்கியத்தின் சிறப்பைக் கற்றாவது எங்கள் நோக்கத்தோடு இணைத்துச் சொல்ல வேண்டும் எனக் கருதினோம் (2011:XIV- XV).

இக்கால எளிய நிலையினர் ஏற்கவும், பழந்தமிழ் உரைகாரர்களின் பொருள் நுட்பம் புலப்படவும், சங்க நூற்கள் பதினெட்டுக்கும் உரை காண எண்ணிற்று 'நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம்'. சங்க இலக்கியம் இக்கால மக்களின் இல்லமெல்லாம் பரவவேண்டும் எனவும், உலகெங்கும் பண்டைத்தமிழ் இலக்கியம் கற்க அவாவுநர் யார்க்கும் கையகத்து எளியதாய் அவ்விலக்கியம் கிடைக்க வேண்டுமெனவும், இந்நிறுவனம் எண்ணி ஒரு முன்வெளியீட்டுத் திட்டம் வரைந்து செயற்பட்டது (2011: XXXIV).

இந்நிறுவனம் வெளியிடுவதற்கு மர்ரே நிறுவனமே பேருதவி புரிந்தது என நினைவுகூர்கின்றமை பாராட்டத்தக்கது. ஏனெனின் 1957ஆம் ஆண்டிலே சங்க இலக்கியம், தொல்காப்பியம், கல்லாடம், கம்பராமாயணம், வில்லிபாரதம், நாலாயிர திவ்வியப்பிரபந்தம் ஆகியவற்றை வெளியிட்ட பெருமை மர்ரே நிறுவனத்தையே சாரும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிறுவனம் சங்க இலக்கியத்தின் மூலத்தை மட்டுமே பதிப்பித்தது. இந்நிறுவனத்தின் அனுமதி பெற்று மூலத்துடன் உரையையும் சேர்த்துப் புதுயுக நூல் வெளியீட்டகம் பதிப்பித்தது.

சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான கலித்தொகை, இராண்டாயிரத்து நான்காம் ஆண்டு முதல் பதிப்பாக அ.விசுவநாதன் உரையுடன் வெளிவந்தது. அதன்பிறகு இரண்டாயிரத்து ஏழில் மூன்றாம் பதிப்பும், இரண்டாயிரத்து பதினொன்றில் நான்காம் பதிப்பும் வெளிவந்தன.

அ.விசுவநாதன் உரையமைப்பும் உரைச்சிறப்பும்

அ.விசுவநாதன் அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் மேனாள் துறைத்தலைவர் ஆவார். இவர் கும்பகோண மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் (இடையாத்து) கொண்டவர். கல்வி பயின்றமை அனைத்தும் காரைக்குடி, அழகப்பா கல்லூரியில் ஆகும். அவ்விடத்தே அவர் ஆசிரியர் பணியினையும் மேற்கொண்டார். அப்பணிக்காலத்தில் மாணாக்கர்களுக்குச் சங்க இலக்கியம் பாடம் புகட்டிய அனுபவம் ஏற்பட்டது. அதுமட்டுமின்றி பாரத நூல்கள் திறனாய்வு, சங்க இலக்கியச் சிந்தனைகள், தமிழ் இலக்கியச் சிந்தனைகள் போல்வன நூல்களுக்கு ஆசிரியராகவும், புறநானூற்று 301 - 350 பாடல்களுக்கு உரையாசிரியராகவும் விளங்கியமை நோக்கற்பாலது. இப்பின்னணியிலே கலித்தொகைக்கு உரை எழுதுகின்றார். உரை எழுத, நச்சினார்க்கினியர் உதவியை நாடுகின்றார். அஃதாவது, நச்சினார்க்கினியரின் உரையைப் புரிந்து கொண்டு, பகுத்து, எளிமைப்படுத்தித் தருகின்றார்.

இக்கலித்தொகை உரை நச்சினார்க்கினியரின் உரையை அடிப்படையாகக்கொண்டு, எளிய நடைப்பாங்கில் அமைந்துள்ளதைக் கற்பார் உணர்வர். நச்சினார்க்கினியரின் உரையை ஆழ்ந்து நோக்குதற்கு இவ்வுரை வழிகாட்டியாக அமையும் (2011: xlii).

இக்கருத்து, நேமிநாதர் தொல்காப்பியக் கடலைக் கடக்க, எம் ஆக்கம் படகாக அமையும் என்று கூறுவது போன்றதாக அமைந்துள்ளது. சுருக்கமாகக் கூறப்போனால் நச்சினார்க்கினியரின் உரையின் எளிய வடிவம் அ.விசுவநாதனின் கலித்தொகை உரையாகும். இவ்வுரைநூல் வணிக நோக்கன்று என்பது உரையர் அ.விசுவநாதரின் குறிப்பு.

> சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், கி.பி.1938ஆம் ஆண்டில் இந்நூலினை நச்சினார்க்கினியர் உரையுடனும் இளவழகனாரின் உரைவிளக்கத்துடனும் வெளியிட்டது. அடுத்து, கல்லூரிகளில் தமிழைச் சிறப்புப் பாடமாகக் கொண்டு பயிலும் மாணவர்கள் பெருகிய நிலையில் பல பதிப்பகத்தார் இந்நூலினைப் பதிப்பிக்கலாயினர். அவை பெரும்பாலும் வணிக நோக்குடையனவாகும் (2011: xliii).

வணிக நோக்கா? வணிக நோக்கமின்மையா?

இப்பதிப்பகம் கலித்தொகையைப் பதிப்பித்தது வணிக நோக்கிலா? அல்லது வணிக நோக்கமின்மையா? என்பது கவனத்திற்குரியது. ஏனெனின் இன்று பல பதிப்பகங்கள் வணிக நோக்கையே முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளன. புதுயுக நூல் வெளியீட்டகம் எதனை முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது எனின் எளிமை என்பதை முன்னிறுத்துகின்றது எனலாம். எளிமை வணிக நோக்கின் முதன்மை அடையாளம். இருப்பினும் பழைய உரையர்களின் மொழிநடைகளைப் புரிந்து கொள்வதில் இன்று இடர்ப்பாடுகள் நிலவத்தான் செய்கின்றன. உரைகளை எளிமைப்படுத்தி உரைப்பது வணிக நோக்கத்தைப் பின்பற்றுவது அன்று. எனினும் மூலத்தில் உள்ள அடிகளை புணர்ச்சி அடிப்படையில் பிரித்துக் கூறினால் அதன் யாப்பு எனும் வடிவம் எண்ணாகும், காணாமல் சென்று விடும் அல்லவா? பின்னர் வரும் தலைமுறை இந்நூல் ஒரு உரைநடை என்றோ? புதுக்கவிதை என்றோ? கருதிவிடவும் வாய்ப்பு இருக்கும் அல்லவா? இதனை ஏன் கருத்தில் கொள்ளவில்லை என்பது புலப்படவில்லை.

கலித்தொகை என்றால் நினைவில் நிற்பது கலிப்பாவின் இலக்கணமேயாம். எளிமை எனும் நோக்கில் மூலத்தினைப் புணர்ச்சி அடிப்படையில் பிரித்துப் பதிப்பதால் ஏற்படும் சிக்கலைப் பின்வருவன சுட்டும்.

- பாவடிவம் சிதைவுறும் .
- பின்னையத் தலைமுறை சங்கப்பாடல் புதுக்கவிதை நடையுடையது என எண்ண இடமளிக்கும் .
- இலக்கணம் .கற்கும் நோக்கமும் இல்லாது போகும் (யாப்பு)
- பாக்கள் உரைநடைத் தன்மையைப் பெறுவதற்கும் வாய்ப்பு ஏற்படும்.

ஆக, புதுயுக நூல் வெளியீட்டின் நோக்கம் எளிமை என்பதாக இருந்தாலும், அதனூடே வணிக நோக்கும் ஊடியிருப்பதை ஊகிக்க முடிகின்றது. பதிப்பகங்கள் மூலத்தினை, மட்டுமாவது சிதைவுறாது காப்பது தலையாயக் கடமையாகக் கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

இனி, இக்கலித்தொகையின் உரையர், நச்சினார்க்கினியரின் உரையை எங்ஙனம் பாகுபடுத்தி விளக்கி நிற்கின்றார் என்பதைக் காண்குதும். இவர், கூற்று, கூற்றுவிளக்கம், உரை, உரை விளக்கம், அருஞ்சொற்பொருள், இலக்கணக் குறிப்பு, பண்பாடு, இலக்கிய மேற்கோள், உள்ளுறை-இறைச்சி விளக்கம் என்பதாக நச்சினார்க்கினியர் உரையைப் பாகுபடுத்திப் பார்க்கின்றார். இதன் உரை விளக்கப் பகுதியில் உவமைச் சிறப்பையும், கூற்றின் நோக்கத்தையும்

முன்வைக்கின்றார் . இவரின் உரைச் சிறப்புகளுள் இப்பகுப்புமுறையைச் சுட்டலாம். இவை ஈண்டு விளக்கப்பெறவில்லை. இப்பகுப்புமுறைகளின் ஊடே காணலாகும் உரைத்திறன்களுள் சில மட்டும் விளக்குதும். அதற்கு முன்பு நச்சினார்க்கினியர் உரையிலும் அ.விசுவநாதன் உரையிலும் உள்ள புரிதல்களை நோக்குதும்.

நச்சினார்க்கினியரும் விசுவநாதனும்

கலித்தொகையின் நச்சினார்க்கினியர் உரையையே தாம் எளிமைப்படுத்தி எழுதுவதாக அ.விசுவநாதன் குறிப்பிட்டுள்ளார். அவர் எந்தளவிற்கு எளிமைப்படுத்தி உரைத்துள்ளார் எனக் காண்குதும்.

கூற்று எனும் பொருண்மையில் அமைந்த விளக்க முறையை நச்சினார்க்கினியர் உரையை அவ்வாறே எடுத்தாண்டு, நீண்ட சொற்களை எளிமைப்படுத்தியும், புணர்ச்சிப் (சந்தி) பிரித்தும், அவ்வுரையைத் தடித்த எழுத்துருவில் (Bold Letter) தந்தும் அமைத்துள்ளார். அதனைக் கீழ்வரும் உரைப்பகுதிகள் சுட்டும்.

> இஃது 'ஒன்றாத் தமரினும்' என்னுஞ் சூத்திரத்திலே 'நாளது சின்மையு மிளமைய மருமையுந் - தாளாண் பக்கமுந் தகுதிய தமைதியும் - இன்மைய திளிவு முடைமைய துயர்ச்சியும் - அன்பின தகலமும் மகற்சிய தருமையும்' எனக் கூறிய எட்டினையுந் தலைவன் கூறக் கேட்ட தோழி அவற்றை 'நிகழ்ந்தது கூறி நிலையலுந் திணையே' என்னும் விதியாற் றலைவற்குக் கூறிச் செலவழுங்குவித்தது (1999:53).

இது நச்சினார்க்கினியர் தந்த பதினெட்டாவது பாடலுக்கான கூற்று. இதே கூற்றை அ.விசுவநாதன்,

> 'ஒன்றாத் தமரினும்' என்னும் சூத்திரத்தில் 'நாளது சின்மையும், இளமையது அருமையும், தாளாண் பக்கமும், தகுதியது அமைதியும், இன்மையது இழிவும், உடைமையது உயர்ச்சியும், அன்பினது அகலமும் அகற்சியது அருமையும்' எனக் கூறிய எட்டினையும் தலைவன் கூறக்கேட்ட தோழி, அவற்றை 'நிகழ்ந்தது கூறி நிலையலும் திணையே' என்னும் விதியால் தலைவற்குக் கூறிச் செலவு அழுங்குவித்தது (2011:66)

எனத் தருகின்றார். இவர் தம்காலச் சூழமைவுக்கு ஏற்பச் சில சொற்களைப் புணர்ச்சிப் பிரித்துக் கூறியுள்ளமையும், மாற்றத்தையும் பின்வரும் அட்டவணைத் துலக்கும்.

நச்சினார்க்கினியர்	*அ.விசுவநாதன்*
இஃது	–
சூத்திரத்திலே	*சூத்திரத்தில்*
சின்மையு மிளமைய	*சின்மையும் இளமையது*
தருமையுந்	*அருமையும்*
பக்கமுந்	*பக்கமும்*
தமைதியும்	*அமைதியும்*
இன்மைய திளிவு	*இன்மையது இழிவும்*

முடைமைய துயர்ச்சியும்	*உடைமையது உயர்ச்சியும்*
அன்பின தகலமும்	*அன்பினது அகலமும்*
மகற்சிய தருமையும்	*அகற்சியது அருமையும்*
எட்டினையுந்	*எட்டினையும்*
விதியாற்	*விதியால்*
செலவழுங்குவித்தது	*செலவு அழுங்குவித்தது*

இந்தக் கூற்றில் அமைந்துள்ள விளக்கத்தை வாசகர்கள் புரிந்து கொள்ள இயலாது எனக்கருதி, அதற்கு ஒரு விளக்கம் தந்துள்ளார். இது, அவர் (அ.விசுவநாதன்) புதுக்கிய புத்துரை. அதற்கடுத்து, பாடலுக்கான விளக்கத்தைக் குறிப்பிடும் போது, நச்சினார்க்கினியரின் உரையை நன்கு உள்வாங்கியப் பின்னரே, அதை எளிமைப்படுத்தித் தருகின்றார். சான்றாக ஓரிருவரிகளைக் காட்டுதும்.

அரும்பொருள் வேட்கையி னுள்ளந் துரப்பப் பிரிந்துறை சூழாதி யைய (கலி.18:1)

எனும் கலித்தொகை அடிக்குப் பின்வருமாறு உரையமைக்கின்றனர்.

> ஐய! அரிய பொருளிடத்துச் செல்கின்ற ஆசையினால் உள்ளம் உஞற்றுகையினாலே பிரிந்துபோயிருத்தலை நினையாதே கொள் (1999:53)

இது நச்சினார்க்கினியரின் தொடர். இத்தொடரை

> ஐய, அரிய பொருள்களின் மேல் எழுந்த ஆசையால் உள்ளம் தூண்டுதலினால், தலைவியைப் பிரிந்து, வேற்று நாடு சென்று இருத்தலைப் பற்றி நினையாதிருப்பாயாக (2011:67)

எனப் புரிந்து கொண்டு அ.விசுவநாதன் எளிமைப் படுத்திக் காட்டுகின்றார். அவர் செய்துள்ள சிறு மாற்றங்களைப் பின்வரும் அட்டவணைத் துலக்கும்.

நச்சினார்க்கினியர்	***அ.விசுவநாதன்***
ஐய!	*ஐய,*
அரிய	*அரிய*
பொருளிடத்துச்	*பொருள்களின்*
செல்கின்ற	*மேல் எழுந்த*
ஆசையினால்	*ஆசையால்*
உள்ளம்	*உள்ளம்*
உஞற்றுகையினாலே	*தூண்டுதலினால்*
பிரிந்துபோயிருத்தலை	*தலைவியைப் பிரிந்து,*
-	*வேற்று நாடு*
-	*சென்று*

–	*இருத்தலைப் பற்றி*
நினையாதே கொள்	*நினையாதிருப்பாயாக*

இன்னும் ஒரு தொடர் மட்டும் சான்று காட்டுதும்.

> ஒழிந்தவ ரெல்லாரு முண்ணாதும் செல்லார் (கலி.18:6)

எனும் கலித்தொகை அடிக்கு,

> பொருள் தேடப் போகாதிருந்தவர்கள் எல்லாரும் ஒருவாற்றான் உண்ணாமையும் ஒழுகார் (1999:53)

என உரைக்கின்றார் நச்சினார்க்கினியர். இவ்வுரையை

> பொருள் தேடப் போகாது இருப்பவர்கள் எல்லோரும் ஒருவாற்றான் உண்ணாது அழிந்து விடுவதும் இலர் (2011:67)

என எளிமைப்படுத்திக் காட்டுகின்றார் அ.விசுவநாதன். இருவர் உரைக்கும் உள்ள மாறுபாட்டைப் பின்வரும் அட்டவணை விளக்கும்.

நச்சினார்க்கினியர்	***அ.விசுவநாதன்***
பொருள் தேடப்	*பொருள் தேடப்*
போகா	*போகாது*
திருந்தவர்கள்	*இருப்பவர்கள்*
எல்லாரும்	*எல்லோரும்*
ஒருவாற்றான்	*ஒருவாற்றான்*
உண்ணாமையும்	*உண்ணாது*
ஒழுகார்	*அழிந்து*
–	*விடுவதும்*
–	*இலர்*

மேற்சுட்டிய அவ்விரு உரைத் தொர்களை ஒப்புநோக்கும் பொழுது,

- நச்சினார்க்கினியர் உரையைப் பெரிதும் தழுவியிருத்தல்.
- வழக்கிழந்தச் சொற்களை நீக்கி, தம்கால வழக்குச் சொற்கள் இட்டு நிரப்புதல்.
- நீண்ட சொற்களைப் புணர்ச்சி பிரித்து சிறு சிறு சொற்களாக மாற்றுதல்.
- சமகாலப் பதிவையும் பதிவு செய்தல் வேற்று நாடு சென்று இருத்தலைப் பற்றி :சான்று) .(நினைத்திருப்பாயாக
- பல சொற்களை நச்சினார் க்கினிர் உரையிலிருந்து எடுத்தாளுதல் .
- விளங்காத சொல்லுக்குத் தெளிந்த விளக்கத்தைக் கொடுத்தல் ஒழுகார் :சான்று) - அழிந்து விடுவதும் இலர்).

போல்வன சிந்தனைகள் அ.விசுவநாதன் உரையில் காணமுடிகின்றமையை அறிய முடிகின்றது. இப்பின்னணியிலே அவரின் உரைச்சிறப்பை இனிக் காண்குதும்.

அ.விசுவநாதனின் உரைச் சிறப்பு

ஒரு உரை சிறந்து விளங்க வேண்டுமெனின் தாம் கற்ற, பெற்ற அனுபவங்களை இயைந்த இடத்தில் விளக்கி நிற்க வேண்டும். அதனை உரைச் சிறப்புகளாகவும் கொள்ளலாம். அவ்விதம் இவர் உரையில், கோட்பாட்டையும் உவமையையும் இனங்காட்டல், பன்னூற் பயிற்சி, பிறர் உரையை மென்மையாக மறுத்தல், வினா - விடைப் பாங்கு, முதுமொழி காட்டல், முந்து உரையைப் போற்றும் பாங்கு, மரபு மாற்றத்தைச் சுட்டிக் காட்டல், ஆய்வுக் குறிப்புத் தருதல், சமகாலப் பதிவையும் தருதல், ஒப்பு நோக்கும் இடங்களைச் சுட்டல் ஆகியனவற்றைக் காணலாம். இன்னும் பலத்திறம் உள. அவை கூறின் விரியும். ஆயின், மேற்குறித்தவை மட்டும் விளக்குதும்.

கோட்பாட்டையும் உவமையையும் இனங்காட்டல்

பாடலில் இடம்பெறும் சங்க அகப்பாடல்கள் கூறும் அகம், அறம் சார்ந்த கோட்பாடுகளை உரை வழி அறிந்து, உரை விளக்கத்தில் பதிவு செய்வதும், அதனைப் போன்று உவமையையும் இனங்காட்டி விளக்குவதும் அவர் தம் உரைச் சிறப்பை முன்னிறுத்துகின்றன.

> வறியார்க்கொன்று ஈவதே ஈகை; இல்வாழ்க்கையின் அடிப்படை இரந்தோர்க்குக் கொடுத்தல் கொடாதிருத்தல் இழிவு என்னும் உயரிய கோட்பாட்டினை இப்பாடல் உணர்த்துகின்றது, மலை கடந்து, காடு கடந்து சென்று ஈட்டும் பொருளினும் மனைவியைப் பிரியாது இருத்தலே சிறந்த பொருள் என்பதை வலியுறுத்துகின்றது. தோட்டிக்கு அடங்காத யானை, யாழ் இசை கேட்டு அடங்கியது, தலைவன் தோழியின் சொற்கேட்டு செலவு நீங்கித் தங்கியதற்கு உவமையாகக் காட்டப் பெற்றுள்ளது (2011:9).

பன்னூல் பயிற்சி

ஒரு இலக்கியப் பாடலுக்கு உரை எழுதும் பொழுதோ அல்லது பாடம் நடத்தும் பொழுதோ அப்பாடலுக்குத் தொர்புடைய பிற இலக்கியப் பாடல்களைச் சுட்டிகாட்டுவது மரபு. இம்மரபு இடையிடையே பொருண்மைக்கு ஏற்ற இடத்தில் கொணர்ந்து தருவது சரியான பாடஞ் சொல்லும் முறையைக் காட்டும். ஆனால், உரைர் அ.விசுவநாதன் கலித்தொகைப் பாடலின் கருத்துக்குத் தொர்புடைய பிற இலக்கியப் பாடல்களை உரைப்பகுதியின் இறுதியில் தொகுத்தளிக்கும் முறையைக் கையாண்டுள்ளார். இது பிற உரையரிடமிருந்து இவரைத் தனித்துக் காட்டும் பண்பாக அமைந்தாலும், இது ஒரு சரியான அணுகுமுறையாகத் தோன்றவில்லை. ஏனெனின் தொகுத்துத் தருவதினால் அவர்தம் பன்னூல் பயிற்சியைத் தருமே ஒழிய, எக்கருத்துக்காக இப்பாடல்கள் தரப்படுகின்றன என்ற புரிதலை வாசகருக்கு ஏற்படுத்தாது என்பது கவனிக்கற்பாலது. இப்போக்குச் சிலரிடத்து நிலவுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இனி, இவருக்குப் பன்னூல் பயிற்சி அமைந்துள்ளது எனக் குறிப்பிட்டோம். அல்லவா, அவருடைய வாசிப்பில் எத்தகு நூல்கள் இடம் பெற்றுள்ளன வென்றால், புறநானூறு, அகநானூறு, குறுந்தொகை, திருக்குறள், முல்லைப்பாட்டு, பெருங்கதை, சிலப்பதிகாரம், பொருநராற்றுப்படை, மணிமேகலை, பெரும்பாணாற்றுப்படை, பதிற்றுப்பத்து, மதுரைக்காஞ்சி, நற்றிணை, சீவகசிந்தாமணி, பரிபாடல், திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, குறிஞ்சிப்பாட்டு, பரிபாடல், கலித்தொகை, கம்பராமாயணம், தொல்காப்பியம், இனியவை நாற்பது, நாலாயிர

திவ்வியப்பிரபந்தம், புறப்பொருள் வெண்பா மாலை, தஞ்சைவாணன் கோவை, நெடுநல்வாடை, சூளாமணி, முதுமொழிக்காஞ்சி, இன்னாநாற்பது, களவியற்காரிகை ஆகிய நூல்களாம்.

இவ்வாசிப்பு முறை அப்பாடல்களுக்காக இவர் வாசித்ததா? அல்லது நச்சினார்க்கினியரின் உரையில் இடம்பெற்ற மேற்கோள் பாடல்களைத் தொகுத்தளிக்கும் முறையா? என்பது ஆராயற்பாலது.

பிறர்உரையை மென்மையாக மறுக்கும் பண்பு

மரையா மரல்சுவர, மாரி வறப்ப எனத் தொடங்கும் பாலைக்கலி ஆறாவது பாடலின் உரைவிளக்கத்தில் நச்சினார்க்கினியரின் உரைவிளக்கத்தைச் சுட்டி, விளக்கம் தரக்கூடிய பண்பை இவரிடத்துக் காணமுடிகின்றது. அவ்வுரைப்பகுதி வருமாறு:

> இவளை உடன்கொண்டு செல்வோமாயின், இவள் தண்ணீர் பெறாத அருந்துயரம் நமக்கு மிக்க வருத்தத்தைத் தருமாகலின், இவள் தன்னை உடன்கொண்டு சேறல் எவ்வாற்றானும் தகாதென்றும், யாம் அன்பு பெருகுமாறு சூழ்ந்த காரியத்தினை இவள் அன்பு அறும்படி சூழ்ந்தேமாகக் கருதி இறக்குமாறு கூறினாளென்றும் உட்கொண்டு, இனி இவளை ஆற்றுவித்துப் பிரிவோம் எனச் செலவழுங்கினமை தோன்ற நிற்றலின் வேறு ஒருபொருள் தோன்றி நின்றது - என்று நச்சினார்க்கினியர் உரைவிளக்கம் தந்துள்ளார் .
>
> 'துன்பம் துணையாக நாடின் அதுவல்லது இன்பமும் உண்டோ எமக்கு' எனத் தலைவி கூறினமையின் வழியிடைத் துன்பத்தை எண்ணாமல் இணைந்து செல்லும் இன்பத்தையே விரும்புதலின் அவள் உள்ளப் பண்பு புலனாகின்றது (2011:23).

வினா விடைப் பாங்கு

பாடலில் இடம்பெறும் வினாக்களைத் தொகுத்து ஓரிடத்தில் விடையிறுப்பது சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் கற்பித்தல் முறைகளுள் ஒன்றாகும். அதனைச் செம்மையாக ஆண்டிருக்கிறார் உரைர் அ.விசுவநாதன். அவ்வுரை 'வேனில் உழந்த வறிது உயங்கு ஓய் களிறு' எனத் தொடங்கும் பாலைக்கலி ஏழாம்பாடலில் அமைந்துள்ளது. அவ்வுரை வருமாறு:

> தலைவன் பொருள் தேடச் செல்ல இருத்தலை அவன் செயற்பாடுகளினால் தலைவி அறிந்து வைத்தும் பிரிதற்கு முன்னரே அவளிடத்து மாறுபாடுகள் காணப்பட்டன. தலைவன் பிரிந்தால் தலைவி உயிர் வாழ மாட்டாள் என்பதைத் தோழி உறுதிபடக் கூறினாள். பொருள் பெரிதா? தலைவியின் உயிர் பெரிதா? முயன்று ஈட்டும் பொருள் தலைவியின் இழந்த உயிரை மீட்டுத் தருமோ? தராது காண்; செலவை ஒழிப்பாயாக என்றாள். தலைவனும் செலவு ஒழிந்தனன் (2011:26).

முதுமொழி சுட்டல்

பண்பாடு குறித்து அடையாளப்படுத்தும்போது, அப்பாண்பாடு குறித்த முதுமொழிகளையும் சுட்டிக் காட்டியுள்ளார் . 'நடுவு இகந்து ஒரீஇ நயன் இல்லான் வினை வாங்க' எனத் தொடங்கும் பாலைக்கலி எட்டாம் பாடலுக்கான பண்பாட்டுக் குறிப்பில் அரசன் வழியையே மக்களும் பின்பற்ற வேண்டும் எனும் முதுமொழியைச் சுட்டியுள்ளார் . அவ்வுரை வருமாறு:

இசை பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. யாழில் ஏழ் நரம்புகளைக் சுட்டி வாசித்துள்ளனர்இல்லறத்தின் சிறப்பு விருந்தோம்பல் ஆகும். வருவிருந்து ஓம்பல் இல்லறத்தார் கடன். அரசன் நல்ல முறையில் புறந்தருதல் குறிப்பிடத்தகும். அரசன் எவ்வழி, குடிகள் அவ்வழி என்பது முதுமொழி (2011:31).

முந்து உரையரைப் போற்றும் பாங்கு

பழைய உரையர்கள் உரைநயங்களைப் புகழ்ந்து கூறும் முறையை இவருரையிலும் காண முடிகின்றது. இஃது அணைமருள் இன்றயில் அம்பிணைத் தடமென்தோள் எனத் தொடங்கும் பாலைக்கலி 14ஆம் பாடலுக்குரியது. அவ்வுரை வருமாறு:

> தோழியின் பேச்சாற்றல் பாராட்டத் தக்கது; கற்புக்காலத்தே நலம் பாராட்டியது என்பது தோன்ற, பண்டையின் பாராட்டி என்றாள்; வேண்டாதார் சொற்கேட்டு நடக்கின்ற நீ, பொருள் ஈட்டுதற்காகவோ செல்கின்றாய்? எம்மிடத்துள்ள வெறுப்பினால் செல்கின்றாய் என்று தலைவனை மடக்கினள். ஏதிலார் கூறும் சொல் - என்பதற்கு நச்சினார்க்கினியர் உறவு போல இருந்து உறுதி அல்லாதன கூறுவார் கூறும் மொழிகள்' என்று உரை கூறியிருப்பது நயமுடைத்து (2011:52-53).

மரபு மாற்றத்தைச் சுட்டிக் காட்டல்

சங்க அகப்பாடல்கள் தெய்வத்தை வாழ்த்துவது மரபு. அதனுடன் மன்னனையும் வாழ்த்தக் கூடிய மரபு மாற்றங்களும் நிகழ்ந்துள்ளன என்பார் அ.விசுவநாதன். அதனை 103, 104 ஆகிய பாடல்களின் உரையில் சுட்டுவதைக் காணமுடிகின்றது. அவ்வுரைப்பகுதிகள் வருமாறு:

> ஏறு தழுவிய பின்னர்க் குரவைக் கூத்து நிகழும் மரபு சுட்டப்பெற்றுள்ளது. குரவைக் கூத்தினுள் தெய்வத்தைப் பாடிப் பரவுவினர்.
>
> அகப்பாடலில் தெய்வத்தைப் பாடுவதோடன்றி, தம் அரசனையும் 'எம்கோ வாழிர் ' என்று வாழ்த்துகின்றனர். அகப்பாடலில் அரசனை வாழ்த்துவதும் மரபு மாற்றமாகும்.
>
> சிலப்பதிகாரத்தில் மங்கள வாழ்த்துப் பாடலின் இறுதியில் அரச வாழ்த்து அமைந்துள்ளது ஒப்புநோக்கத்தகும்.
>
> பரிபாடலில் (3:31,32) கூந்தல் என்னும் பெயரோடு கூந்தல் எரிசினம் கொன்றோய்' என்று வருதல் காண்க (2011:459).
>
> அகப்பாடலில் அரசனை வாழ்த்தும் முறை இப்பாடலிலும் இடம் பெற்றுள்ளது. பாண்டிய மன்னனின் ஆணை யாண்டும் நிலவத் திருமாலை வழிபட்டனர் (2011:468).

ஆய்வுக் குறிப்புத் தருதல்

முடிந்த வரை முன்னோர் உரையை மறுக்க வேண்டியவிடத்து மறுக்கின்றனர். பிறர்உரைநயமும் போற்றுகின்றனர். இவை தம் புரிதலின் அடிப்படையில் நிகழ்வது. இப்புரிதல் இல்லா விடத்தில் ஆய்வுக் குறிப்பாக விடுத்துச் செல்லுதல் அவர் திறன்களுள் ஒன்றாக விளங்குகிறது.

> இப்பாடல் கைக்கிளைக்கு உரியது என்று கூறும் நச்சினார்க்கினியர் கருத்து சிந்தனைக்குரியது (2011:514).

சமகாலப் பதிவையும் தருதல்

பனையால் வரும் நன்மைகள் பற்பல. அவற்றுள், ஒரு பொருளை ஓரிடத்திற்கு எடுத்துச் செல்வதற்கு உதவுவது அதன் ஓலையால் முடையப் பெற்ற பெட்டியாம். இப்பெட்டியைப் பயன்படுத்தும் வழக்கம் பண்டு தொட்டுக் கடைப்பிடிக்கப் பெற்று வருகின்றது. இன்று அருகி வருகின்றது. நகர்மயமாதலும் நாகரிகப் போக்குமே இதற்குக் காரணம். இக்கலித்தொகையின் உரையர் அ.விசுவநாதன் ஓலைப் பெட்டியை எடுத்துச் செல்லும் வழக்கத்தைக் கூறியும், அப்பயன்பாட்டை தாமும் கண்டதைப் பதிவு செய்தும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இஃது கலித்தொகை 117ஆவது பாடலின் உரையில் காணலாகிறது.

> மகளிர் வினைமேற் செல்லுங்கால், பனை ஓலையால் முடையப் பெற்ற புட்டியை எடுத்துச் செல்வது வழக்கம். இன்றும் பனை ஓலையால் புட்டி முடையும் வழக்கம் உண்டு. (2011:525)

இதனைப் போன்று அந்தணர்களின் வழக்கத்தையும் கலித்தொகை 126ஆம் பாடல் உரையில் சுட்டிக் காண்பிக்கின்றார்.

> அந்தணர்மாலையின் ஞாயிற்றின் மறைவு நோக்கியிருந்து மந்திரங் கூறி வழிபடும் வழக்கம் இன்றுமுளது (2011:554)

ஒப்பு நோக்கும் இடங்களைச் சுட்டுதல்

கலித்தொகைப் பாடல்கள் பிற இலக்கியங்களுடன் ஒப்பு நோக்கியும் உய்த்துணரலாம். அவ்வாறு அமையக் கூடிய பாடல்கள் எந்த இலக்கியங்களுடன், அவ்விலக்கியங்களில் எந்தப் பாடலுடன் ஒப்பு நோக்கத்தக்கது என்ற குறிப்பை 137ஆம் பாடலின் உரையில் காணலாகின்றது.

> தலைவனொடு கொண்ட நட்பிற்குக் காரணம் நகையாகும். தலைவியின் நகைப்பு, 'நகை முதலாக நட்பினுள் எழுந்தகைமை' என்றும் போது, 'யானோக்குங்காலை நிலனோக்கும் நோக்காக்கால் தான் நோக்கி மெல்ல நகும்' என்ற குறட் கருத்து ஒப்பு நோக்கத் தக்கது (2011:596)

நிறைவாக இதுவரை விளக்கப்பெற்ற கருத்துக்களின் அடிப்படையில் நோக்கும் பொழுது, புதுயுக நூல் வெளியீட்டாரின் கலித்தொகைப் பாதிப்பு அனைத்துத் தமிழரும் வாசிக்க வேண்டும் எனும் நோக்கத்தைக் கொண்டும், உரையர் நச்சினார்க்கினியரின் உரையை அனைவரும் எளிதில் கற்று உணர வேண்டும் எனும் நோக்கத்தையும் கொண்டு விளங்கியமையான் பதிப்பும் உரையும் எளிமை எனும் நேர்கோட்டில் பயணிக்கின்றமையை அறிய முடிகின்றது.

துணைநின்றன

அனந்தராமன் இ.வை.(பதி.), 1984 (நிழற்படப் பதிப்பு), கலித்தொகை மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், பதிப்புத் துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் .

உங்கள் நூலகம் ஆசிரியர்குழு, 2012, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வைர விழா, கீற்று (இணைய இதழ்).

நச்சினார் க்கினிர் (உரை), 1999, கலித்தொகை, திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

பரிமணம் அ.மா., பாலசுப்பிரமணியன் கு.வெ.(பதி.), 2011, புறநானூறு (மூலமும் உரையும்), புதுயுக நூல் வெளியீட்டகம் (NCBH), சென்னை.

முனீஸ்மூர்த்தி மு., 2010, கலித்தொகை பதிப்பு வரலாறு (1887-2010), காவ்யா பதிப்பகம், சென்னை.

விசுவநாதன் அ.(உரை), 2011, கலித்தொகை (மூலமும் உரையும்), புதுயுக நூல் வெளியீட்டகம்(NCBH), சென்னை.